# சங்ககால, சூழலியல் பாதுகாப்பில் மரங்களின் பங்கு

(Seed money க்காக பெறப்பட்ட நிதிநல்கையில் எழுதப்படும் கட்டுரை)

# The Role of Trees in the Ecological Conservation of the Sangam Age (An Article Written on the Basis of the Financial Assistance from Seed Money)

*முனைவர் வெ. பரிமளம்*
உதவிப் பேராசிரியர்
தமிழ் இலக்கியத்துறை
என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி

**Dr. V. Parimalam**
*Assistant Professor*
*Department of Tamil Literature*
*NGM College, Pollachi*

## ஆய்வுச் சுருக்கம்

*மனிதன், விலங்கு, பறவை, மரம், செடி, கொடி எனப் பல்வேறு உயிரினங்கள் வாழும் இடம் பூமியாகும். நீர், நெருப்பு, காற்று, நிலம் ஆகியவையே உயிரினங்கள் வாழத் தேவையான சூழலைத் தருகின்றன. உயிரினங்களும் அவை வாழும் இடத்திற்கிடையே உள்ள உறவுநிலையே சூழல் எனப்பட்டது. சூழலைப் பேணுவதால் மட்டுமே உயிரினங்கள் அழிவின்றி நிலைத்து வாழ முடியும். சூழலைப் பேணுவதில் மரங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன சூழலியல் பாது காப்பில் மரங்களின் பங்கு குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைக்கிறது.*

***முக்கியச்சொற்கள்:*** *சூழலியல், சுற்றுச்சூழல், சூழல் மண்டலம், உயிரினங்கள், இயற்கை*

## Abstract

*Earth is the place where human beings, animals, birds, trees, plants, vines, etc., live. Water, fire, air, and land provide the necessary environment for life. Environment is the relationship between living organisms and the place where they live. It is only by maintaining the environment that organisms can survive without extinction. Trees play an important role in maintaining the environment. This article sets out to study the role of trees in environmental protection.*

***Keywords:*** *Ecology, Environment, Ecosystem, Organisms, Nature.*

**Citation**

Parimalan, K. "Moral Explanation – The Code of Conduct Ethics – Compare." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 2, 2023, pp. 119–24.

**சூழலியல்**

*சூழலியல் என்பது மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான உறவை ஆராய்வது. Ecology என்னும் இச்சொல் okios என்னும் வார்த்தையிலிருந்து பெறப்பட்டதாகும். புவியின் இயற்கை நிலைகள் அனைத்தும் சுற்றுச்சூழல் என்பதில் அடங்குகிறது.*

***உயிரினங்கள் வாழும் பகுதியில் உள்ள காற்று, நீர் போன்றவை அடங்கிய இயற்கை நிலை சுற்றுச்சூழல்***

***(கிரியாவின் தற்காலத்தமிழ் அகராதி ப-462)***

*என்றும்,*

***சூழல் மண்டலத்தில் உள்ள உயிரற்ற காற்று, நீர், வெப்பம், ஒளி இன்னபிறவும் உயிருள்ள தாவரங்கள், உயிரினங்கள் போன்றவற்றையும் உள்ளடக்கியதே சுற்றுச்சூழலாகும்.***

***(சுற்றுச்சூழல் பாதுகாப்பு ப-401)***

*என்றும்,*

***சுற்றுச்சூழல் என்பது மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள நுண்மையான சமன்படுத்தப்பட்ட மென்மையான உறவாகும்.***

***(மேலது ப.415)***

*என்ற சூழலியல் பற்றிய கருத்துகளை அறியமுடிகிறது.*

**மரங்களும் சூழலியலும்**

*மரங்கள் சுமார் 38 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது என்பர். மண் அரிப்பைத் தடுக்கவும் மண் வளத்தை மேம்படுத்தவும் நுண் உயிர்கள் வளரவும் மரங்கள் துணைபுரியும். அவை வேரை ஆழச் செலுத்துகின்ற தன்மையுடையது. கரியமில வாயுவை உறிஞ்சி உயிர்க்காற்றை மனிதர்களுக்கு தரவல்லது. மழைவளம், பறவை விலங்குகளின் உணவு மூலமாகவும் மனித தேவைகளுக்கும் மரங்கள் பயன்படுகின்றன. இன்று ஏறத்தாழ ஒரு லட்சம் மர வகைகள் உள்ளதாக உலக வள ஆதார நிறுவனம் கூறுகிறது.*

**தொல்காப்பியத்தில் மரங்கள்**

***ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மரங்களுக்கு ஓரறிவு உள்ளது என்னும் கருத்தை,***

***புல்லும் மரமும் ஓரறிவினரே (பொருளதிகாரம் 1572 )***

*என்ற நூற்பாவில் கூறுகிறார். தட்பவெப்பம் மழை போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு நிலத்தை பாகுபடுத்திய தொல்காப்பியர் அதில் உள்ள பூக்கள், மரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என அகத்திணைகளுக்கு பெயர் சூட்டி இருக்க வேண்டும். முதற்பொருள் கருப்பொருள் ஆகியவை சூழல்களே ஆகும். நிலம், நீர், அவற்றால் நிகழும் நிகழ்வுகள் ஆகியவை முதற் பொருளாகவும் உயிரினங்களை பற்றி கூறுவது கருப்பொருளாகவும் அமைகின்றது*

***தெய்வம் உணாவே மா மரம் புள்***
***பறை செய்தியாழின் பகுதியோடு தொகைஇ***

***(தொல், அகத்திணையியல், 30)***

*என்னும் நூற்பாவால் அறியலாம்.*

**சங்ககால மரங்கள்**

*ஆதி காலத்தில் மனிதன் உணவுத் தேவைக்காக மட்டுமே மரங்களை பயன்படுத்தி இருக்க வேண்டும். மருந்து, வீடு கட்டுதல் போன்ற மரங்களின் பல்வேறு பயன்களை அறிந்து கொண்ட பின் மரங்களுக்கும் மனிதனுக்குமான உறவு பலப்பட்டு இருக்க வேண்டும் சங்க காலத்தில் ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய மரங்களாக சிலவற்றை வகைப்படுத்தியுள்ளனர். அவை நில, நீர் வளம், பயன்பாடு கருதி வளர்க்கப்பட்டு இருக்க வேண்டும்.குறிஞ்சிக்குரிய மரங்களாக சந்தனம், தேக்கு,மூங்கிலும் முல்லை நிலத்தில் கொன்றை, காயா, போன்ற மரங்களும் மருத நிலத்தில் காஞ்சி, மருதம் போன்ற மரங்களும் நெய்தல் நிலத்தில் கண்டல்,புன்னை, ஞாழல் போன்ற மரங்களும் பாலை நிலத்தில் ஓமை, பாலை, கள்ளி போன்ற மரங்களும் சுட்டப்பட்டுள்ளன. அவை நிலத்திற்கேற்ப வளரும் இயல்புடையவை.*

**மரங்களைத் தெய்வமாக வழிபடல்**

*பழந்தமிழர்கள் மரங்களின் பயனை உணர்ந்து அதை புனிதத் தன்மையோடு பார்த்தனர். அதனால் தான் அதை இறையாக வழிபட்டனர். இதை*

***தொன்று உறை கடவுள் சேர்ந்த பராரை***
***மன்ற பெண்ணை வாங்கு மடல் குடம்பை (நற்றிணை 33, 3-4)***

*என்றும்*

***மன்ற மராஅத்த பேசும் முதிர் கடவுள் (குறுந்தொகை 87, 1)***

*என்பதும்*

***தொன்று உறை கடவுள் (அகநானூறு 3,4)***

*மரங்களின் பயன் கருதிய சங்கத்தமிழர் அவற்றை வெட்டாமல் இருப்பதற்காக அதில் தெய்வம் உறைந்து இருப்பதாகக் கூறி இருக்கலாம். மேலும், அவற்றின் பயன்களைக் கருதியும் தெய்வமாகவே கருதி இருக்கலாம்.*

**மழை பெறுதல்**

*நிலம் என்பது உடம்பாகவும் நீர் என்பது உயிராகவும் கருதப்பட்டது. நீர் பெறுவதற்கு மழையே முக்கியக் காரணியாகும். மழை நீரை ஆறுகள் ஏரிகள் மூலமாக சேமித்து பயிர்கள் வளர உதவியதோடு நிலத்தடி நீர்மட்டத்தையும் பாதுகாத்தனர்.மழை பொழிவதற்கு காரணமாக மரங்கள் அமைந்திருந்தன. அதனால் தான், மரங்களை நட்டு வளர்த்தது அவற்றை மறு உற்பத்தியும் செய்தனர். ஆற்றில் அடித்து வரப்பட்ட காந்தள் செடியை தங்கள் இல்லத்தில் நட்டு வளர்த்தனர். இதை*

***மாலை பெய்த மணம் கமல் உந்தியோடு***
***காலை வந்த காந்தள் முழு முதல் இல் உய்த்து நடுதலும்***
***(குறுந்தொகை 361)***

*என்கின்றது. தான் வளர்த்த புன்னை மர நிழலில் தலைவனை சந்திக்க தலைவி மறுக்கிறாள் என்கிறது நற்றிண. ஆகையால் விதைகளை நட்டு மரங்களை வளர்க்கும் மறு உற்பத்தி திறன் பற்றியும் சங்க தமிழர்கள் அறிந்திருந்தனர் என்பது புலனாகிறது.*

**மண்அரிப்பை தடுத்தல்**

*பூகம்பத்தால் ஏற்படும்கடல் சீற்றம், புயல் போன்றவற்றால் வரும் வெள்ளப்பெருக்கில் இருந்து காத்துக்கொள்ள கடற்கரையோரங்களில் மரங்களை வளர்த்தனர் .அம் மரங்கள் மண் அரிப்பை தடுக்கப்பயன்பட்டன. கடற்கரைச் சோலைகளில் தாழை, நெய்தல், புன்னை, அடப்பங்கொடிகள் வளர்க்கப்பட்டன. இதை*

***தாழை மணந்து ஞாழலோடு***
***கெழீஇ படப்பை நின்ற முடந்தாட் புன்னை (அகம் 150 12:1)***

*என்பதால் அறியலாம்.பனை மரங்களோடு ஞாழல், தாழை, புன்னை மரங்கள் ஆகியன வளர்ந்த சோலைகளை மணல்குன்றுகள் சூழ்ந்திருக்கும். அவை கண்டல் வேலி என்று அழைக்கப்பட்டன. கண்டல் வேலிகள் கடல் சீற்றத்தை தடுக்கும். இதை*

***புது மணல் கானல் புன்னைநுண்தாது***
***கொண்டல் அசைபளி தூக்கு- தொறும் குருகின்***
***வெண்புறம் மொசிய வார்க்கும் தென்கடல்***
***கண்டல் வேலிய ஊர் அவள் (நற்றிணை 74 ,6-10)***

*என்பதால் அறியலாம். புன்னை மரங்களும் கடற் பெருக்கினை தடுக்க பயன்பட்ட செய்தியை*

***புன்னை அரும்பிய புலநீர் சேர்ப்பன் (நற்றிணை 94, 6)***

*என்கிறது. கடல் சீற்றத்தால் பெருகி வரும் பேரலைகள் அங்கிருக்கும் மரங்களில் மோதும் போது சிறுநுரை என மாறி இல்லாமல் போகும் என்ற செய்தியை,*

***பெருநீர்க்கல் பொரு சிறுநுரை மெல்ல மெல்ல இல்லாகுமே***
***(குறுந்தொகை 290,4-6)***

*என்ற வரிகள் சுட்டுகின்றன இதற்கு தாழை மடலின் வளைந்த தன்மையே காரணமாகும். கடற்கரை ஓரங்களில் மட்டுமின்றி ஆற்றங்கரை ஓரங்களிலும் மரங்கள் நட்டப்பட்டு இருந்தன. வைகை ஆறு வந்து மோதும் கரைகளில் ஞாழல்,புன்னை தாழை முதலான மரங்கள் வளர்க்கப்பட்டன. இவை மண் அரிப்பைத் தடுத்து ஆற்று நீர் ஊருக்குள் போகாமல் தடுத்தன.*

***அகரு வழை ஞெமை ஆரம் இணைய .....***
***வந்து மதுரை மதில் பொரூஉம் வான் மலர் தாஅய் (பரிபாடல் 12, 5-9 )***

*என்கிறது. மேலும் கடல் அலைகள் மணலை தொடர்ந்து கொண்டு வந்து குவிப்பதால் மணல்மேடுகளும் காணப்பட்டன அவை எக்கர் என்று அழைக்கப்பட்டது. இதை குன்று போல் எக்கர் (கலித்தொகை 127) என்கிறது. கடற்கரையில் நட்டப்பட்ட புன்னை மரம் பனைமரம் போன்றவை கடற் பறவைகளின் வாழிடமாகவும் இறை தேடவும் இளைப்பாறவும் பயன்பட்டன*

**காவல் மரங்கள்**

*மரங்களின் மருத்துவ சமூக சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தை உணர்ந்த பண்டைத் தமிழர்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் மரங்களின் மருத்துவ சமூக, சுற்றுச்சூழல்*

*முக்கியத்துவத்தை உணர்ந்தவர் பண்டைத்தமிழர்கள் ஒவ்வொரு மன்னனுக்குரிய காவல் மரம் என்ற ஒன்றை வகுத்து அதை பாதுகாத்தனர். காவல் மரங்கள் எதிரியால் அழிவுபட்டால் அது அம்மரத்தினையுடைய அரசனுக்கு இழுக்காக கருதப்பட்டது ஆகையால் காவல் மரங்களை அரசர்கள் வெகுவாக பாதுகாத்தனர். என்கிறது புறநானூறு. (57)*

*மேலும், ஒரு சிறு செடி கூட வளர்ந்து யானையைக் கட்டும் கட்டுத்தறியாக மாறும் எனவே சிறு செடிகளைக் கூட அழிக்கக்கூடாது என்கிறது நாலடியார் (192).*

*நீர் நிலைகளை அமைத்தல், மரம் நடுதல் போன்ற செயல்களே பேரின்பத்துக்கான வழிகளாகும் ஆகும் என்கிறது சிறுபஞ்சமூலம். மருத்துவப் பொருட்கள் தயாரிக்கக் கூட மரத்தினை வெட்டக் கூடாது என்ற சிந்தனை தமிழரிடையே காணப்பட்டது என்ற கருத்தை*

***மரம்சா மருந்தும் கொள்ளார்*** ***(நற்றிணை.226)***
*என்ற அடி மூலம் அறியமுடிகிறது.*

*மரங்கள் தங்கள் இல்லத்தில் ஒருவராகவே சங்கத்தமிழர்கள் கருதினார். தான் அந்த புன்னை மரத்தினைத் தங்கை என்று கருதி அதன் கீழ் தலைவனை சந்திக்க தலைவி நாணினாள் என்பதை.*

**நும்மினும் சிறந்து நுவ்வை ஆகும் என்று**
***அன்னை கூறினால் புன்னை அது நலனே*** ***(நற்றிணை-172. 4-5)***
*என்னும் அடிகள் விளக்குகிறது இதில் சங்கத் தமிழகள் மரம் செடி, கொடி போன்றவற்றையும் தன் குடும்பத்தில் ஒருவராக கண்டனர். என்பது புலனாகிறது. மேலும் விதையை புதைத்து அதற்கு நீர் வார்த்து வளர்த்து மரமாக்கிய காரணத்தால் விதைகளை மீண்டும் மரமாக்கி சூழல் பேணுதலுக்கு துணை புரிந்தனர் என்பதையும் அறிய முடிகிறது*

**பல்லுயிர்ச் சூழல்**

*மரங்கள் அடர்ந்த நிலப்பகுதி காடு எனப்பட்டது. காடுகள் பல்வேறு உயிரினங்களிள் வாழ்விடம் ஆகும். காடு என்பது பறவை, ஆடு என்பது விலங்குகள் போன்றவை வாழ அடிப்படையானதாகும். காட்டிற்கு ஆதாரமாக அமைவன மரங்கள். மரங்கள் அதிகம் இருந்தால் தான் பல்லுயிரச் சூழல் சூழல் வளம் பெரும். காடும் காடு காடு சார்ந்த நிலமும் என்றே முல்லை நிலம் அடையாளப்படுத்தப்பட்டது. அத்தகைய பல்லுயிர்ச் சூழல் அமைந்த காடு இருந்ததை, முல்லை............அகம் 4 (1-7) என்கிறது. மரங்கள் அழிந்தால் மரத்தினால் பெருகும் பல்லுயிரிகள் அழியும் அதனால் காலநிலை மாற்றமும் சூழலியல் சமமின்மையும் தோன்றும்.*

*இன்றைய நாகரிக காலகட்டத்தில் பல்வேறு விதமான துணிவுகளை நாம் பயன்படுத்துகிறோம். ஆனால் அவை மட்கிப் போகாமல் சூழலுக்கு கேடு விளைவிக்கின்றன. அக்காலத்தில் மண்ணில் மக்கி போகக்கூடிய தழையாடைகளை பெண்கள் அணிந்திருந்தனர். இதை*

*தழை அணி அலகில் மகளிருள்ளும் (குறுந்தொகை-125)*
*நறுந்தழை மகளிர் ஒப்பும் கிள்ளையொடு (குறுந்தொகை-3)*

*என்பதாலும் அறியலாம்.*

*மழை பெய்கிற போது பனைமரத்தின் ஓலையில் செய்யப்பட்ட குடையை மக்கள் பயன்படுத்தி சுற்றுச்சூழலைக் காத்தனர்.*

**முடிவுரை**

*நில அடிப்படையில் சங்கத் தமிழர் மரங்களை நட்டு வளர்த்தனர். சூழலுக்கேற்பவே அம்மரங்களும் பயன்தந்தன. மண் அரிப்பைத் தடுக்கவும் கடல் அலைகளைத் தடுக்கவும் வறட்சியைத் தாங்கும் விதமாவும் மரங்கள் விளங்கின. பறவைகள் விலங்குகள், பல்லுயிர்ப் பெருக்கம் ஆகியன மரங்களால் மட்டுமே சாத்தியப்படும் என்பதை சங்கத் தமிழர் உணர்ந்து மரங்களைப் பாதுகாத்தனர்.*

**துணைநூல்பட்டியல்**

1. *ஐக்கிய நாடுகள் சூழல் திட்டம்* UNEP *அறிக்கைகள்.*
2. *வாக்கர்னகள், எம். ஆய்வுக்கட்டுரை, சமூகம் மற்றும் பிரதேசத் திட்டக் கல்லூரி. பிரித்தானிய கொலம்பியா பல்கலைக்கழகம், வான்கூவர், கனடா, 1994.*

## References

1. *United Nations Environment Programme UNEP Reports.*
2. *Walkernagel, M. Dissertation, College of Social and Regional Planning. University of British Columbia, Vancouver, Canada, 1994.*